DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

**STC.No.114/2025**

**2026-ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 24- ம் நாள் செவ்வாய்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா.03 -வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.லட்சுமி இளநிலை உதவியாளர் நிறைவேற்றுபவர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 03 | தொழில் | - | உதவி ஆய்வாளர் |
| பெயர் | - | திரு.ராஜேந்திரன் | வட்டம் | - | வால்பாறை |
| த/பெ | - | ராஜமாணிக்கம் | சமயம் | - | |
| கிராமம் | - | ஷேக்கல்முடி காவல் நிலையம் | வயது | - | 58/2026 |
| சாதி | - | | | | |

**24-02-2026**

**( எதிரி ஆஜர்)**

(அரசு தரப்பில் 348 BNSS-ன் கீழான மனு தாக்கல் செய்யப்பட்டு கூடுதல் சாட்சியாக விசாரிக்கப்பட்டார்.)

<u>முதல் விசாரணை:</u>

1. நான் தற்போது ஷேக்கல்முடி காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.குமார் அயல் பணி காரணமாக கோவை சென்றுவிட்டபடியால் நீதிமன்ற நேரத்தை கருத்திற்கொண்டும், நீதியின் நலன் கருதியும் அவருக்கு பதிலாக நான் சாட்சியமளிப்பதற்கு BNSS பிரிவு 348-ன் கீழ் மனு தாக்கல் செய்து நீதிமன்ற அனுமதியுடன் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியமளிக்கிறேன். கடந்த 17.09.2024-ம் தேதி மாலை 17.15 மணிக்கு ஷேக்கல்முடி காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.குமார் அவர்களுடன் காவலர் 1554 திரு.ஜான்சன் மற்றும் தலைமைக்காவலர் 584 திரு.கண்ணன் ஆகியோர்கள் ஷேக்கல்முடி காவல் நிலைய சரகத்திற்குட்பட்ட சோலையார் டேம், சேடல்டேம், உருளிக்கல் எஸ்டேட் ஆகிய பகுதிகளில் மதுவிலக்கு மற்றும் சூதாட்டம் சம்பந்தமாக கண்காணித்து வந்தபோது சிறப்பு உதவி ஆய்வாளருக்கு கிடைத்த ரகசிய தகவலின் படி 17.20 மணிக்கு உருளிக்கல்எஸ்டேட் முதல் டிவிசன் பஸ்ஸ்டாப் அருகே கண்காணித்தபோது அங்கு நின்றுகொண்டிருந்த ஒரு நபர் போலீஸ் பார்ட்டியாகிய எங்களை கண்டதும் ஓட எத்தனித்தவரை சுற்றி வளைத்து பிடித்து விசாரிக்க தனது பெயர் உன்னிக்கிருஷ்ணன் (வயது 55), த/பெ.பாலன் உருளிக்கல் முதல் டிவிசன், வால்பாறை எனக் கூறி தனது பையில் வைத்திருந்த சுமார் 180 மி.லி அளவுகொண்ட Vorion brandy என லேபிள் ஒட்டப்பட்ட 08 பாட்டில்களை ஆஜர்படுத்தி விசாரிக்க தான் சுயலாபம் கருதி அரசு அனுமதியின்றி விற்பனை செய்ய வைத்த குற்றத்தை ஒப்புக்கொண்டவரை 17.20 மணிக்கு சிறப்பு உதவி ஆய்வாளர் காரணம் கூறி கைது செய்துள்ளார். பின்பு 17.30 மணிக்கு சிறப்பு உதவி ஆய்வாளர் எதிரியிடமிருந்து தடய பொருள்களை கைப்பற்றி கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்துள்ளார். **(அந்த கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** பின்னர் எதிரியுடன் 17.50 மணிக்கு நிலையம் வந்து நிலைய குற்ற எண் 28/2024, ச/பி 4 (1) (C) TNP Amendment Act 2024 ன் படி சிறப்பு உதவி ஆய்வாளர் வழக்கு பதிவு செய்துள்ளார். (**அவர் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.6-ஆக**

**குறியீடு செய்யப்படுகிறது.)** பின்னர் எதிரியை பாராவசம் ஒப்புவித்து தக்க இரு நபர் ஜாமீனில் விடுவித்துள்ளார். பின்னர் தடய பொருட்களை 18.00 மணிக்கு ஷேக்கல்முடி காவல் நிலைய பின்புறம் வைத்து 08 பாட்டில்களில் இருந்த பிராண்டியை கீழே ஊற்றி அதில் பொது மக்களுக்கு பாதிப்பு ஏற்படாத வண்ணம் அழித்துள்ளார். **(அந்த அழித்தல் மகஜர் அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** பின்னர் சாட்சிகள் காவலர் 1554 திரு.ஜான்சன் மற்றும் தலைமைக்காவலர் 584 திரு.கண்ணன் ஆகியோரை தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். இத்துடன் தனது புலன் விசாரணை முடித்து 17.09.2024-ம் தேதி எதிரி மீது ச/பி 4 (1) (C) TNP Amendment Act 2024 ன் படி குற்ற இறுதியறிக்கை தயார் செய்து தாக்கல் செய்துள்ளார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

1. சம்பவயிடமான உருளிக்கல் பஸ்ஸ்டாப் அருகே கடைகள் உள்ளது என்றால் சரிதான்.அந்த இடத்தில் ரோட்டிற்குமேல் வீடுகள் உள்ளது என்றால் சரிதான். அங்கிருந்தவர்களை இவ்வழக்கில் சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் வரமறுத்ததால் சாட்சியாக விசாரிக்கவில்லை. ஷேக்கல்முடி காவல் நிலையத்திலிருந்து சம்பவயிடம் எவ்வளவு துாரத்தில் உள்ளது என்றால் சுமார் 07 கி.மீ.துாரத்தில் உள்ளது. எதிரி மீது மதுபானத்தை வைத்திருந்ததாக வழக்குபதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் விற்க வைத்திருந்ததால் பதிவு செய்யப்பட்டுள்ளது. நான் சொன்னது போல சம்பவம் நடந்திருந்ததால் அங்கிருந்தவர்களுக்கு தெரிந்திருக்கும் என்றால் அந்த சமயத்தில் அங்கு யாரும் இல்லை. எதிரியிடம் மதுபானத்தை விற்பனைக்காக வைத்திருந்ததாக ஒப்புதல் வாக்குமூலம் பெறவில்லை என்றால் சரிதான். சம்பவயிடம் குறித்து பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்யவில்லை என்றால் சரிதான். 3-ம் நபருக்கு எதிரி மது பானத்தை விறப்னை செய்யும் போது கையும் கலவுமாக பிடித்தோமா என்றால் இல்லை. எதிரி மீது தனி நபர் புகார் கொடுத்துள்ளார்களா என்றால் இல்லை. எதிரியிடம் விற்பனை செய்து வைத்திருந்ததாக பணம் எதுவும் கைப்பற்றினோமா என்றால் இல்லை. எதிரி அரசு மதுபானத்தை வைத்திருந்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்கு சொத்துக்கள் டாஸ்மாக் கடையில் வாங்கியவை என்றால் சரிதான். எந்த அரசு கடையில் வாங்கினார் என்பதை விசாரித்து அரசு மதுபானக்கடையில் உள்ளவர்களை சாட்சியாக இவ்வழக்கில் முன்னிடவில்லை என்றால் சரிதான். டாஸ்மாக் கடையில் ஒரு நபருக்கு எவ்வளவு விற்கவேண்டும் என்று அளவீடு உள்ளதா என்றால் தெரியவில்லை. இவ்வழக்கில் வழக்கு சொத்துக்களில் மொத்த அளவான 1.620 மி.லிட்டர் என்பது டாஸ்மாக் கடையில் ஒரு தனி நபருக்கு விற்கக்கூடிய அனுமதிக்கப்பட்ட அளவு என்றால் 3 பாட்டில்கள் மட்டும் விற்க அனுமதி உள்ளது. வரையறுக்கப்பட்ட அளவை விட ஒரு நபர் மதுபானத்தை தனது உடைமையில் வைத்திருந்ததாலும்,அல்லது விற்னைக்காக வைத்திருந்தாலும் குற்றம் என்றால் சரிதான். அரசு ஆணைப்படி ஒரு தனி நபர் தனது சொந்த உபயோகத்திற்கு 4.5 லிட்டர் மதுபானம் வைத்துக்கொள்ளலாம் என்றால் சரிதான். எதிரியை சம்பவயிடத்தில் கைதுசெய்து வழக்கு சொத்துக்களை கைப்பற்றி யிருந்தால் அங்கு உள்ளவர்களுக்கு தெரிந்துயிருக்கும் என்றால் சம்பவசமயத்தில் அங்கு யாரும் இல்லை. நான் சொன்ன இடத்தில் சொன்ன விதத்தில் எதிரியை கைதுசெய்யவில்லை என்றாலும் எதிரியிடம் இருந்து ஏந்த பொருளும் கைப்பற்றவில்லை என்றாலும் சரியல்ல. ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்து, இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. புள்ளிவிவரக் கணக்கிற்காக எதிரி மீது சிறப்பு உதவி ஆய்வாளர் அவர்கள் பதிவு செய்த வழக்கிறிக்கு நான் தவறாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும்சம்பந்தம் அல்ல என்றால் சரியல்ல.

<u>**மறு விசாரணை :**</u> இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence

of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திருமதி.N.மீனாட்சி
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.